உ

குகமயம்

மறக்கமுடியாத

# முருகேசு சுவாமிகள்



திருவடிகளுக்கு சமர்ப்பணம்

31.3.97

உ
குகமயம்

# தவத்திரு
# முருகேசு சுவாமிகளின்
# 16ம் நாள்
# விழா மலர்

தொகுப்பு:

சந்நிதியான் ஆச்சிரமம்

வெளியீட்டாளர்:

ஆ. அருணாசலம்
தொண்டைமானாறு

அச்சுப்பதிவு:
கணாதிபன் அச்சகம்
மூத்தநயினார் கோவிலடி
கரணவாய்
கரவெட்டி.

உ
குகமயம்



சுவாமிகள் பூவரச மரத்தின் கீழ்
ஆனந்த நிலையில் இருக்கும்
ஓர் அரிய காட்சி



## நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

### ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய ஸ்வாமிகளின்

# அஞ்சலிச் செய்தி

முருகன் அடியார்களே!

முருகேசு சுவாமிகளுடைய மறைவு அனைத்து மக்களுக்கும் பேரிழப்பாகும். தோன்றின் புகளோடு தோன்று என்பது முது மொழி அந்நிலையில் முருகேசு சுவாமி அவர்கள் தோன்றி புகளோடு வாழ்ந்த மாமனிதராவார் என்கடன் பணிசெய்து கிடப்பதே என்ற வாக்கிற்கமைய செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் அடியார்கள் வழிபடுவதற்காகிய வசதிகள் அனைத்தையும் தானே முன்னின்று செய்துகொடுத்த உத்தமர் ஆவார். சந்நிதியான் ஆச்சிரமத்தின் வளர்ச்சிக்கு நீண்ட பங்களிப்பைச் செய்து மக்களை இறைவனாகக்கண்டு பெருந்தொண்டாற்றிய சுவாமிகளுக்கெடுக்கும் அஞ்சலி மக்களுடைய மனதில் தொண்டுள்ளத்தையும் பலன்கருதாப் பணியையும் செய்வதற்கு முருகன் அருள்புரியவேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம்.

முருகேசு சுவாமிகளுடைய ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி





# 'தன்னை உணர்ந்த தத்துவ ஞானி'

அபயம் என்று வந்தவர்க்கு எல்லாம் அஞ்சேல் என்று ஆறுதல் அளிக்கும் ஆற்றங்கரையான் சந்நியில் பரமார்த்தம தொடர்போடு ஒரு ஜீவாத்மா இந்த நூற்றாண்டில் உலாவிக் கொண்டிருந்தது. அந்த ஜீவாத்மாவே எல்லோரும் வணங்கி மகிழ்கின்ற சில நாட்களுக்கு முன் சாடுடைய சுடலைப் பொடியாகிப்போன முருகேசுச் சுவாமிகள் ஆவர் ஆதரவற்று ஆற்றங்கரையானைத் தேடி வருபவர்களுக்கு அன்னப்பசி தீர்த்து ஆதரவு வார்த்தை சொல்லி ''அரோகரா'' சொல்லிக் கொண்டு அமைதியாய் பணி செய்தவர் இவர் பழுத்த மாம் பழம் போல் மேனியும் கழுத்திலே உருத்திராட்சமும் அணிந்த சுவாமிகளை புராணத்திலும் ஓவியத்திலும் நாம் கருத்தறிந்த முனிவர்களை நேரே கண்டதுபோன்ற திருப்தியை தரக்கூடிய ஞானத் தோற்றமாக அவர் தேகப் பொலிவு கண்டவர்க்கு எல்லாம் திருப்தி தந்தது வினைப்போகம் தீர்க்க வேலவனின் சந்நிதானத்திற்கு வந்த சுவாமிகள் பலபேரது வினைகளைப் போககுகின்ற ஞானியாகப் பரிணமித்தார். யான் சுவாமிக ளைத் தரிசிக்கும்பேறு ஐந்து ஆண்டுகள்தான் ஏற்பட்டதாயி னும் அப்பேறு பெரும் வரப்பிரசாதம் என நான் கருதுகின் றேன் எனது சொற்பொழிவை அநுபூதி ஞானம் பெற்ற அடி யவர் போல் விளங்கிய சுவாமிகள் சந்நிதி வாசலில் என் முன் னால் இருந்து இரசித்து ஆசீர்வதித்தது முதுகில் தட்டிக் கொடுத்தது யான் பெற்ற பெரும்பேறு அவரோடு அளவளா வுவது பெரிய ஆனந்தம். சந்நிதியின் வரலாறு முதல் சந்நிதி யைச் சூழவுள்ள நாற்பதிற்கு மேற்பட்ட மடங்களின் வரலாறு, மடங்களில் வாழ்ந்த சித்தர்களின் வரலாறு எல்லாம் அறிந்த மூத்த பிறவியாக சுவாமிகள் விளங்கினார்.

எல்லா மடங்களும் நாட்டின் சூழ்நிலையால் அமையுற்று இருந்தபோதும் சந்நிதியான் ஆச்சிரமம் தன் நித்தியப் பணி யைத் தளராது ஆற்றுவதற்கு தக்க பலமாக தள்ளாடும் வய



திலும் நன்று உதவியவர் சுவாமிகள். சென்ற வருடம் சந்நிதியான் திருக்கோயில் பெரும் சேதத்திற்கு உட்பட்டிருந்த வேளை பெருங்கவலையோடு இருந்த சுவாமிகள் இவ்வாண்டு உடைந்த மணிக்கோபுரம் புனர்நிர்மானம் செய்யப்பட்டு ஆலயத் திருப்பணிகள் மீண்டும் நடைபெறுகின்ற நற்காட்சியை மனத்திலே நிறைவாக்கிக்கொண்டு பரமாத்ம நிலை பெற்றிருப்பது சுவாமிகளுக்கும் சுவாமிகளோடு தொடர்புடையவர்களுக்கும் பெரிய ஆறுதலுக்குரிய விடயமாகும். சுவாமிகள் தொடக்கி வைத்த நற்பணிகள் பல. அவற்றை அனுபவித்தவர்கள் அவரை இறைவனாகவே என்றும் வழிபாடு செய்தார்கள். தன்னை உணர்ந்த தவஞானியாக இன்று இவ்வுலகில் நடமாடுபவர்கள் மிகமிகக் குறைவு. முருகேசுச் சுவாமிகள் ஞான வாழ்வில் உலாவி பல பேரது முட்டுத் தீர்க்கும் விளக்காகப் பிரகாசித்தவர். திருமூலர் சுவாமிகள் திருமந்திரத்தில் சொன்ன

" தன்னை உணர்ந்த தத்துவ ஞானி
முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பான்
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவான்
சென்னியில் வைத்துச் சிவனை நினைப்பான் "

என்ற இவ் வார்த்தைக்கு உரியவராக தன் வினையும் நீக்கி பின் வினையும் போக்கி மாசற்ற சோதியாய் மலர்ந்த மலர்ச்சுடராய், பாசம் பற்று அறுத்து ஏழைகள் எல்லோருடனும் நேசமுடன் நீள்பணியாற்றி குமரவேள் பெருமானோடு இரண்டறக் கலந்துவிட்டார். சுவாமிகளின் நல்லாசி என்றும் இவ் வையகத்தின் நல்வாழ்விற்குக் கிடைக்கப் பிரார்த்தித்து அமைகிறேன்!

' பாலாவி '
மருதனார்மடம்
இணுவில்.

ஆறு. திருமுருகன், B. A.





# 'யான் கண்ட முருகேசு சுவாமிகள்'

நும்பனையில் பிறந்து. வளர்ந்து. சிங்கள தேசத்தில் வர்த்தகத்தில் ஈடுபட்டு சில காலம் சந்நிதியான் முன்றலில் உலாவி 17 3-97-ல் சிவனடி சேர்ந்த முருகேசு சுவாமிகளை நினைக்கும் போது அவர் எம் கண் முன்னே நடமாடிய அருணகிரியார் என்றே சொல்லலாம் ஒருவகையில் ரமணரிஷிக்கு ஒப்பிட லாம் ஏனெனில் இரைப்பையில் புற்றுநோய் கண்டவர் உயிரோடு பல ஆண்டுகள் வாழ்ந்தது அற்புதம் மேல் அற்புதம்தான். அழகன், ஆற்றங்கரையான், அன்னதானக் கந்தன் முன்றலில் பேராசான் சண்முகதாஸ் அவர்களைக் கௌரவிக்க எடுத்த விழாவில் சுவாமிகளைச் சந்தித்தேன். பழுத்த தோற்றமும் பேழை வயிறும்; விபூதி தரித்த நெற்றியும் கொண்டவராகக் காட்சி தந்தார் அன்று தொட்டு இறக்கும்வரை அவரைக் கண்டால்; என்னுள்ளே ஏதோ காந்தம் பாய்வது போலான உணர்வு ஏற்படுவதுண்டு. கடைசிக் காலங்களில் நோய்வாய்ப் பட்டு என்னை அடிக்கடி சந்திப்பதுண்டு. இவையெல்லாம் என்மேல் கொண்ட அன்பும் நம்பிக்கையுமேயாகும்.

ஆண்டவன் அருளால் பாயில் கிடந்து நீண்டகாலம் அழுந்தாது அமைதியாக இறையடி தழுவிக்கொண்டார்.

அவருடைய ஆத்மா சாந்தி அடைவதாக

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**டாக்டர் சி. கதிரவேற்பிள்ளை**
மாவட்ட வைத்திய அதிகாரி
ஆதார வைத்தியசாலை
(மந்திகை) பருத்தித்துறை.

''திருஇல்லம்''
கரவெட்டி.



# சிவமணம் பூத்த செம்மல்
# தவத்திரு முருகேசு சுவாமியார்

கலியுக வரதனாகிய கந்தவேள் பெருமான் பேசும் தெய்வமாக நின்று பேரருள் புரியும் இடம் செல்வச் சந்நிதி முருகன் ஆலயமாகும். ஈழத்து திருச்செந்தூர் எனப் போற்றப்படும் இத்தலத்திற்கு வந்து பக்தி சிரத்தையோடு வணங்கும் அடியார்களின் துன்பங்கள் அனைத்தும் ஆதவனைக் கண்ட பணிபோல அகன்றுவிடும். ஈழத்தில் ஆகம விதிமுறைகளுக்கு அமையாத கோயில்களில் சந்நிதி ஆலயமும் ஒன்றாகும். ஞானந்தான் உருவாகிய நாயகனாகிய முருகப் பெருமானின் ஞானசக்தியாகிய வேல் இவ்வாலயத்தின் மூலஸ்தானத்தில் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது ஈழநாட்டில் முருகப்பெருமான் எழுந்தருளி இருக்கும் ஆலயங்கள் பலவற்றில் முருகனை வேலில் ஆவாகனம் செய்து வழிபடும் முறையே இன்றுமிருந்து வருகிறது சிலப்பதிகாரத்தில் வரும் வேற்கோட்டம் என்னும் தொடர் தமிழ் நாட்டில் வேல் முருகனாக வழிபடப்பட்ட வரலாற்றை நமக்குக் காட்டுகிறது 'வேல் வேல் சந்நிதி வேல்'' என்பதே சந்நிதி முருகன் அடியார்களின் தியான மொழியாகும்.

கந்தவேள் பெருமானின் பெருமையைக் கூறும் கந்தபுராணத்தின் பிறந்தகம் தமிழகம் என்றால் அதன் புக்ககம் யாழ்ப்பாணம் ஆகும் யாழ்ப்பாண மக்கள் முருக வழிபாட்டிலும் கந்தபுராணத்திலும் ஊறித் திளைத்தவர்கள் யாழ்ப்பாண மக்களின் கலாச்சாரமே கந்தபுராண கலாச்சாரம் என்பது பண்டிதமணி அவர்களின் கருத்தாகும் கிராமிய வழிபாட்டில் நடைபெறும் ஆலயங்களிலே தான் சாதாரண மக்களின் பக்தி வெளிப்பாட்டினை பார்க்க முடியும். கிராமியக் கலைகள் வளரும் இடமாகவும் இக் கோயில்களே காணப்படுகின்றன. தன்னை மறந்து இறைவனின் திருவருளிலே தோய்ந்து கரகம், காவடி

என்பன ஆடி தங்கள் வழிபாட்டினைச் செய்யும் அடியவர்களை கிராமிய வழிபாட்டிலேதான் காணலாம். இத்தகைய கிராமிய வழிபாட்டின் பண்புக் கூறுகள் அனைத்தும் சேர்ந்த திருத்தலமே சந்நிதி முருகன் ஆலயம் ஆகும். முருகப் பெருமானாலே ஆட் கொள்ளப்பட்டு அருள் செய்யப்பட்ட கதிர்காமர் பரம்பரையில் வந்த பரதர் குலத்தவர்களே இன்றும் வாய்கட்டிச் சந்நிதியா னுக்கு பூசை செய்கிறார்கள். நாளாந்தம் அறுபத்து நான்கு ஆலம் இலைகளில் அமுது படைத்து பக்தி சிரத்தையோடு முரு கனுக்கு பூஜா காரியங்களைச் செய்கிறார்கள். சந்நிதியானுக்கு நிவேதிக்கப்படும் அமுது மருந்தாகவே அடியார்களாலே பயன் படுத்தப்படுகிறது வாழ்வில் நோயுற்றவர்கள் திக்கற்றவர்கள் போன்ற பலரை ஆதரித்துக் காப்பாற்றும் இடம் சந்நிதி ஆல யம் ஆகும். வெறும் பொழுது போக்கிற்காக வருபவர்களை சந்நிதியில் காண முடியாது. விழுந்தும் எழுந்தும்' அழுதும் தொழுதும் முருகனை வழிபடும் அடியவர் கூட்டத்தையே இங்கு காணலாம் அன்பு உள்ள இடத்திலே தான் உரிமையும் உண்டு என்பது உலகியல் வழக்காகும் சந்நிதியானிடம் அன்பு பூண்டு ஒழுகும் அடியவர்கள் பலர் உரிமையோடு சந்நிதி முருகனுடன் மோதி அருள்பெற்ற வரலாறுகள் பல உண்டு. சந்நிதி ஆல யத்திற்கு வரும் பக்தர்கள் தன்னை மறந்த நிலையில் முருக னுடன் நேரடியாகப் பேசுவார்கள். முருகனுடன் அடியவர்கள் நடாத்தும் ஆத்மார்த்தமான சொல்லாடலுக்கு இங்குள்ள பூசை மரபுகள் தடையாக இருப்பதில்லை

சந்நிதியானின் மூலஸ்தானத்திற்கு அருகில் இருக்கும் பூவ ரசு சந்நிதி ஆலயத்தின் சிறந்ததொரு தலவிருட்சமாகும் சித்த புருஷர் ஒருவரின் சமாதிக்கு மேலேயே இந்தப் பூவரசு அமைந் துள்ளது. சிதறும் சிந்தனைக் கதிர்களை ஒருமுகப்படுத்தி தியா னம் செய்வதற்கு உரிய இடமாக இந்தப் பூவரசு நீழல் காணப் படுகிறது இந்தப் பூவரசம் இலையின் மகத்துவம் அளப்பரியது பக்தர்கள் ஒன்று கூடி பூவரச நீழலில் முருக நாமங்களை உச் சரித்துப் பஜனை செய்வார்கள். இந்தத் தலத்தில் காலம் காலமாக பல ஞானிகளும் சித்தர்களும் வாழ்ந்து வந்தார்கள் சந்நிதிக்கு வரும் அடியார்கள் அனைவரினதும் பசிப்பிணி போக்

குவதற்கு ஆலயச் சூழலில் பல அன்னதான மடங்கள் இருந்து பணியாற்றி வந்தன சந்நிதி முருகனை அன்னதானக் கந்தன் என்றே அடியார்கள் அன்போடு வணங்கி வந்தார்கள். யாழ்ப் பாணத்தின் தவயோகியாகிய யோகர் சுவாமிகள் சந்நிதி ஆல யச் சூழலில் ''சோறு மணக்குதடா'' என்று கூறுவார்.

அடியவர்க்கு எளியவனாகிய ஞானபண்டிதனின் கருணைக் குப் பாத்திரமான பல ஞானிகள் இச் சூழலில் வாழ்ந்தார்கள் இவர்களில் தவத்திரு முருகேசு சுவாமிகளும் ஒருவராவார் தீராத நோயால் பீடிக்கப்பட்ட இவர் முருகனின் திருவருளால் நோய் நீங்கப்பெற்றார். நோய் நீங்கிய பின்பு இவர் முருகன் ஆலயச் சூழலில் இருந்து தவவாழ்வு வாழ்ந்து வந்தார் அடி யார்கள் பலருக்கு ஏற்பட்ட உடல் உளப் பிணிகளை இவர் போக்கி அருளினார். முருகேசு சுவாமியார் பலருடைய பிணி களைத் தீர்க்கும் மருந்தாக சந்நிதியானின் தலவிருட்சமாகிய பூவரச மாத்தின் இலையைப் பயன்படுத்தினார் இவருடைய அருட்பார்வைக்கு உட்பட்டு ஞானதீட்சை பெற்ற அடியவர்கள் பலர் இருந்தார்கள்

வடமராட்சியில் 1987-ல் நடைபெற்ற ஒப்பறேசன் லிபரே சன் காலத்தில் சந்நிதி ஆலயமும் சில சிதைவுகளுக்கு உள்ளாகி பூட்டப்பட்டு இருந்தது. முருகப் பெருமானின் சந்நிதானத் தில் தீபம் எரியாவிட்டால் தமிழ் மக்களுக்குத்தான் தீமை என்பதை உணர்ந்த முருகேசு சுவாமிகள் ஆலயத்தை மீண்டும் இயங்கச் செய்வதற்காக அரும்பாடுபட்டார். தன்னுடைய பொருளையும் முதலீடு செய்து தானே முன்னின்று கும்பாபி ஷேகத்தை நடாத்துவித்தார். பல மடங்கள் இருந்து பலநூற் றுக்கணக்கானவர்களுக்கு அன்னதானம் அளித்த ஆலயச் சூழ லில் நாட்டின் சூழ்நிலைகள் காரணமாக பல மடங்கள் சிதை வுற்றுவிட்டன.

நடமாடும் கோயில் நம்பர்க்கொன்றியில்
படமாடும் கோயில் பகவற்கது ஆமே.

என்ற தவயோகி திருமூலரின் வாக்கிற்கு அமைய அடியார்களுக்கு அமுது அளிக்கும் பணியை சிவப்பணியாகச் செய்து வந்த மயில்வாகனம் சுவாமிகளின் பிரதம தொண்டன் உயர் திரு. செ. மோகனதாஸ் அவர்கள் ''சந்நிதியான் ஆச்சிரமம்'' என்ற பெயரில் ஸ்தாபனம் ஒன்றை உருவாக்கி அன்னதானத் தொண்டை தொடர்ந்து செய்து வந்தார். நாட்டில் மிக மோசமான போர்க்காலச் சூழ்நிலைகள் ஏற்பட்ட பொழுதும் சந்நிதியான் ஆச்சிரமம் இயங்கிக் கொண்டே இருந்தது அரிசி ஒரு கிலோ நூறு ரூபாவைத் தாண்டி விற்ற காலத்திலும் அன்ன தானப்பணி சந்நிதியான் ஆச்சிரமத்தில் தொடர்ந்து நடை பெற்றே வந்தது சந்நிதியான் ஆச்சிரமம் நிலையான நிலத்தையும் கட்டிடத்தையும் பெற்று இயங்குவதற்கு முருகேசு சுவாமிகளின் பங்களிப்பும் முக்கிய காரணமாகும் சந்நிதியான் ஆச்சிரமம் அமைத்த கலைபண்பாட்டுப் பேரவை நடாத்திவரும் ஆத்மீக நிகழ்ச்சிகளுக்கும் இவர் துணையாக இருந்தார். முருகேசு சுவாமியாரின் பூதவுடல் மறைந்தாலும் அவருடைய அருள் அலைகள் சந்நிதி ஆலயச் சூழலிலும் சந்நிதியான் ஆச்சிரமச் சூழலிலும் தொடர்ந்து இருக்கும். நிறை ஞானியாக, தவ யோகியாக சித்த புருஷராக, அருளாளராக அவதார புருஷராக, நடமாடும் கோயிலாக எல்லாம் வாழ்ந்த முருகேசு சுவாமிகளின் அருள் வீச்சு நம்மையெல்லம் வழி நடாத்த சந்நிதி வேலவனின் திருவருளும் துணை செய்ய வேண்டுமென்று பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம்**
(விரிவுரையாளர் பலாலி ஆசிரியர் கலாசாலை)



# அவதார புருஷன் முருகேசன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராச்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன்பொன்னடிகள் கண்டுஇன்று வீடுற்றேன்

என்னும் மணிவாசகர் வாக்குப்படி ஒரு ஆன்மா புல்லிலிருந்து படிப்படியாக பல பிறப்புக்களை மேல்நோக்கி அடைகின்றது. மேலிருந்து செய்யும் தவறுகளினாலும் சாபங்களினாலும் கீழ் நோக்கிச் செல்கின்றன. இச்சாபங்களை நீக்கும் பொருட்டும் பாவங்களை நீக்கி நன்நிலை அடையச் செய்யும் பொருட்டும் சாபவிமோசனம் பெறும் பொருட்டும் இறைவன் தனது பிரதிநிதிகளை அனுப்புவார்

அரியது கேட்கின் நெடிதவிழ் வேலோய் அரிது அரிது
மானிடராதல் அரிது ......

என்னும் ஔவை மொழிக்கமைய அரிதான இம் மானிடப் பிறப்பே தாம்பெற்ற சாபவிமோசனம் பெறுவதற்கும் தவறுகள் யாவையும் அனுபவித்து நீக்குவதற்குரிய பிறப்பாகும். நாம் முன்னர் பெற்ற கடனைத் தீர்ப்பதற்கும் கொடுத்ததைப் பெறுவதற்கும் கடமைகளைச் செய்து முடிப்பதற்கும் உரியதாகும் இப்படிச் செயற்படும்போது சிலசமயம் சந்தர்ப்பவசமாக கூடிக்குறைந்து விடுவதும் உண்டு அப்படிக்கூடிக்குறைவதனால் அவற்றை நீக்கும் பொருட்டு மீண்டும் இப்பிறப்பைப் பெற வேண்டியநிலை ஏற்படலாம்.

மனித குலத்திற்கு மனித கணங்களும் அசுரர் குலத்திற்கு இராட்சத கணங்களும் தேவர்களுக்கு தேவ கணங்களும் ஏவலர்களாக, தொண்டர்களாக காவலர்களாக உள்ளனர். இந் நிலையிலேயே முன்னர் தேவகணங்களின் ஒருபகுதித் தலைவ

ராக இருந்த சுந்தரன் செய்த தவறுகளினாலும் இச்சையினாலும் மனிதப் பிறப்புப்பெறவேண்டியநிலை ஏற்பட்டது. இவருக்குத் துணைநின்ற இவரது கூட்டத்தினரும் மானிடப் பிறப்பைப் பெறவேண்டிய நிலைக்கு உந்தப்பட்டனர். சுந்தரனார் பருத்தித்துறை, தும்பளையில் வேலுப்பிள்ளை தம்பதியினருக்கு ஏக புத்திரனாக 1920 - 05 - 23 இல் அவதரித்தார். இவர் முருகபக்தன் என்பதால் முருகனின் நாமமுடைய வேலுப்பிள்ளை முருகேசு என்னும் நாமம் அமைந்துள்ளது. இவரின் முன்னைய பெயர் சுந்தரன் என்பதால் ஊர்மக்கள் வாயில் செல்லப்பெயராக சண்முகசுந்தரன் என அழைக்கப்பட்டார்.

இவர் தனது கல்வியை யா/தட்டாதெரு மெ. மி. த. க. பாடசாலையில் எட்டாம் வகுப்புவரை கற்றார். இளம் வயதிலேயே தனது மாமன் முறையானவரிடம் சோதிடம் கற்று வல்லுனரானார். கல்வியை நிறுத்தி அனுராதபுரத்தில் வர்த்தக ஸ்தாபனத்தில் சேர்ந்து கடமையாற்றினார். இவர் தனது சொந்தத்திலுள்ள அன்னபூரணம் என்பவரைத் திருமணம் செய்து அவர் இறக்கப் பாக்கியம் என்பவரை மறுமணஞ்செய்தார். அனுராதபுரத்திலிருந்து மதவாச்சியில் சொந்தமாக வர்த்தகஸ்தாபனம் ஒன்றை நடாத்தினார். இக்காலத்திலேயே ஆறுமுகத்தான் புதுக்குளத்தில் வீடு, வயல் வாங்கி கமமும் செய்துவந்தார். இரண்டாவது மனைவியையும் இழந்தவர் பலமுறை கால்நடையாக கதிர்காமத்திற்கு யாத்திரை செய்தார்.

இவருக்கு வயிற்றில் புற்றுநோய் ஏற்படத்தனது வர்த்தக ஸ்தாபனங்களை மூடி வைத்தியம் செய்து சகல வைத்தியர்களாலும் கைவிடப்பட்டார். இந்நிலையில் செல்வச்சந்நிதிவந்து முருகா! நீயே தஞ்சம் என அடைக்கலம் புகுந்தார். அடைக்கலம் புகுந்தவனை காக்கும் பொருட்டும் அவர் மூலம் சில அற்புதங்களைச் செய்யும் பொருட்டும், முன்னர் கதிர்காமர் சமாதி அடைந்த இடத்திலுள்ள பூவரச மரத்தின் இலையையும் புளியமிலையையும் மருந்தாக கொள்ளும்படி கருணைத்



தெய்வமாகிய முருகன் கனவில் தோன்றி கூறியபடி அம்மரத்தின் கீழ் தியானத்திலிருப்பதும் அம்மரங்களின் இலைகளை மருந்தாகவும் கொண்டு நோயிலிருந்து விடுபட்டதுடன் அருள் பெற்றமையால் அருள் வாக்கு அருளி ஆசீர்வதித்து அவல நிலை போக்கும் சத்தி பெற்றார். அதன்பின் பல அன்பர்கள் வீட்டிலிருந்து சோதிடம், அருள்வாக்கு அருளத்தொடங்கினார். இவரின் அற்புதச் செயலால் பத்த அடியார்கள் பலர் பண்பட்டனர். பலனடைந்தனர்.

இவர் காசிக்குச் சென்று தனக்குத்தானே சகல கிரியைகளும் செய்து பூர்வக்கிரியைக்குரியவராகத் திரும்பினார். மீண்டும் முருகன் ஆலயம் வந்து பல அன்பர்களை ஆசீர்வதித்து இன்னல் போக்கி நன்னிலையடையச் செய்தார். இவரின் ஆசிபெற்றுப் பலர் வெளிநாடு சென்றார்கள். தம்மை நன்நிலை அடைய வைத்த முருகனுக்கும் முருகேசுவுக்கும் பணம் அனுப்பினார்கள் இதனுதவியால் அன்னதானமும் ஆலயத்தின் விசேட பூசையும் அன்னசத்திர புனரமைப்பும் நடைபெற்றன.

இவர் வதிரி, சிறுப்பிட்டி, கைதடி, உரும்பிராய், வன்னிப் பகுதிகள், மன்னார்ப் பகுதிகள் ஆகிய இடங்களில் தனது தொண்டர்கள் இல்லங்களில் தங்கிப் பலரின் இன்னல்களை முருகன் அருளால் போக்கினார் அடியார்களுக்கு முருகனாகவே காட்சியளித்தார். உரும்பிராயிலிருக்கும்போது முருகன் ஆணைப்படி தனது சொந்த ஊரான தும்பளைக்கு வந்துசேர்ந்தார். சிறிது காலத்தில் பத்தர்கள் செல்வச் சந்நிதிக்குப் போகமுடியாத திருவிழாச் செய்யமுடியாத நிலை ஏற்பட்டது முருகேசு சுவாமிகள் தான் தங்கியிருந்த இல்லத்திலேயே முருகனுக்கு விழா எடுத்தார் அன்னதானம் செய்தார். அன்பர்கள் அடியார்கள் அங்கேயே வந்து தமது கடமைகளை நிறைவேற்றினர் அந்நிலையிலும் முருகன் ஆலயத்தில் எப்படியும் அவன் அருளால் பூசை நடைபெற்றது அதற்கும் அவர் செய்ய வேண்டியதைச் செய்வித்தார்

யாழ் மக்கள் இடம் பெயர்ந்து வடமராட்சி தென்மராட்சியில் தங்கிய போது பலர் இவரிடம் வந்து ஆசிபெற்றுச்

சென்றனர். வன்னி செல்லவேண்டாம். பயப்படவேண்டாம். உங்கள் இடம் செல்லலாம் எனக்கூறிய முருகேசு சுவாமிகள் மக்கள் நன்மை கருதித் தான் தங்கியிருந்த இடத்திலேயே வியாழ பகவான் மாற்றத்திற்கு சாந்தி பூசையும் சனிபகவான் மாற்றத் திற்கு சாந்தி பூசையும் செய்து விமோசனம் பெறச்செய்தார். இவரின் கூற்றை நம்பிய மக்கள் பலர் வன்னி செல்லாதுநின்று தம்சொந்த இடம் திரும்பினர்.

பின் இவர் அல்வாயிலுள்ள தனது மருகன் வீட்டில் சில நாட்கள் தங்க வேண்டும் என்னும் விருப்பில் சென்றார் அங் கிருக்கும்போது பாரிசவாத நோயினால் பீடிக்கப்பட்டார். இந் நோயினால் பீடிக்கப்பட்டபின் மீண்டும் முருகனின் புனித பிர தேசம் வந்தடைந்தார் பலரின் நோயின் கஷ்டத்திலிருந்து முருகன் அருளால் காப்பாற்றும் இவருக்கு ஏன் இந்நோய் ஏற் பட்டது எனச் சிந்திக்க வேண்டியநிலை எழலாம். இறைவன் மற்றவர்களின் பாவங்களைப் போக்கும் பொருட்டும் அவர்க ளைச் சோதிக்கும் பொருட்டும் நன்நிலையடையச் செய்வதற் குமாக இப்படியான நிலையை உருவாக்குகிறார் அதற்கமைய இவருக்குத் தொண்டுசெய்யும் அரிய வாய்ப்புப் பெற்று தாம் முன்னர் செய்த பாவங்களைப் போக்குவதற்கும் இறையருள் பெற்றவர் என்பதால் இவரைத் தேடிப்பலர் வரும்போது ஆணவம், அகங்காரம் ஏற்படுவதை அடக்கும் பொருட்டும் இந்நிலையை உணர்ந்து பலர் பண்படவுமே இறைவன் இந் நிலையை உருவாக்குவார். இதற்கு உட்பட்டார் எமது முரு கேசு சுவாமிகள்.

காசியிலே தனக்குத்தானே ஈமக்கிரியைகள் செய்து யாவற் றையும் துறந்து பொது மகனாகத் திரும்பியவர் பல இடங்க ளிலும் தங்கி பின் முதலில் தஞ்சமடைந்த புனிதத்தலமாகிய முருகனிடம் தஞ்சமடைந்தார். 1997-ம் ஆண்டு மார்ச் மாதம் 17-ம் திகதி தாயாரின் விசேட தினமான பங்குனித் திங்கட் கிழமை திருவாதிரை நட்சத்திரத்தில் தனது நிழல் வீட்டிலி ருந்து புறப்பட்டார். அவரின் நிழல் வீட்டை முருகனின் தின மாகிய செவ்வாய்க்கிழமை 18-ம் திகதி அக்கினி பகவானிடம்,

அவரின் அடியார்கள், தொண்டர்கள், ஒப்படைத்தனர். இவருக்கு முன்னரே அபரக் கிரியைகள் முடிந்தமையாலும் பூர்வக் கிரியைக்குரியவர் என்பதாலும் பூர்வக்கிரியையே செய்யப்பட்டது.

சகலரையும் துறந்த இவருக்கு இடையில் பந்தபாசம் ஏற்பட்டமையால் சமாதி நிலையடையாமல் மீண்டும் பிறக்க வேண்டும் என்ற அவாக் காரணமாகவே அடிக்கடி பிறக்க வேண்டும் எனப்பலமுறை கூறியபடியும் இவருடன் இருந்தவர்களில் பலர் இப்போது இவரது தொண்டர்களாக இருப்பதனால் அவர்கள் அனைவரும் விமோசனம் அடைய வேண்டும் என்பதற்காகவும் 3 மாதங்கள் தனது அடியார்கள், அன்பர்கள் தொண்டர்கள் இல்லங்கள் தோறும் சென்று வருவதற்காக உலாவந்து 3 மாத முடிவின் பின் தனது சொந்தக் கிராமத்தில் அவதரிப்பார் மீண்டும் முருக தொண்டனாக மால்மருகனாக அவதரித்து மிகுதிக் கடமைகளை நிறைவேற்றித் தனது கூட்டத்தினரை அனுப்பியபின் தான் தனது முன்னைய பதவிக்குச் செல்வார். இன்றும் முருகேசு சுவாமிகள் எம்மிடையே உலா வருகிறார்.

— ஓம் சாந்தி —

**கண பாலசுவாமி**
**(க. வீனுகோபாலு)**







## சந்நிதியுடன் இரண்டறக் கலந்த

# தவத்திரு முருகேசு சுவாமியார்

ஆற்றங்கரை முருகனின் அருளைப் பெற்று அவனுடன் இரண்டறக் கலந்து பேரின்பம் பெற்று விளங்கியதுடன். செல்லப்பா சுவாமி, யோகர் சுவாமிகள் வரிசையில் வைத்து மதிப்பிடக்கூடிய நடமாடும் தெய்வமாகவும் விளங்கியவர் முருகேசு சுவாமிகள் எனக்கூறலாம்

இன்றைய காலகட்டத்தில் மக்களை பக்தி மார்க்கத்தில் ஈடுபடுத்தி தர்மவாழ்க்கையில் நெறிப்படுத்தக்கூடிய செயற்பாடுகளே மிகவம் அவசியமாக வேண்டப்படுவது எனக் கூறலாம். இந்த வகையில் படித்தவர்கள், பாமர மக்கள். வர்த்தகர்கள் இளம்சமுதாயத்தினர் ஆகிய அனைத்துப் பிரிவினரையும் பக்தி மார்க்கத்திற்கு திசை திருப்புவதிலும் தர்மநெறியில் வழிப்படுத்துவதிலும் முருகேசு சுவாமிகள் ஆற்றிய தொண்டை வேறு எவரும் செய்யவில்லை எனத் துணிந்து கூறலாம்

உண்மையான பக்தர்கள் கண்டும் உணர்ந்தும் பரவசப்படக்கூடிய அற்புதங்கள் பல முருகேசு சுவாமிகளின் வாழ்க்கைப் பயணத்தில் இடம்பெற்று வந்ததை அவருடன் மிகநெருக்கமாகப் பழகிய அன்பர்கள் நன்கு அறிவர் எமது சமயத்தின் செயற்பாடுகளில் சந்தேகம், எமது சமயத்தவர்கள் மதம் மாறுதல் எமது சமயத்தில் உள்ளவர்வளே அதன் சிறப்புகளை உணராதிருத்தல் போன்ற நலிவுகளை எம்மதம் கொண்டுள்ள இக்காலச்சூழ்நிலையில் முருகேசு சுவாமிகளின் வாழ்க்கை வரலாறு ஆயிரக்கணக்கான மக்களை ஆத்மீகத்துறையில் ஈடுபாடு உள்ளவர்களாக்கி நல்வழிப்படுத்தும் என்பதுடன் எமது சமயத்தின் சிறப்பையும் மேம்படுத்தும் என்பதில் சந்தேகம் இல்லை.

சந்நிதிக் கந்தன் அருளை அள்ளி வழங்கும் கந்தன் மட்டுமல்ல. அன்னத்தையும் அள்ளி வழங்கும் அன்னதானக் கந்தன்

உ

குகமயம்



என்பதை உணர்ந்து தற்பொழுது செயற்பட்டுக் கொண்டிருக் கும் சந்நிதியான் ஆச்சிரமத்தின் கட்டுமானப் பணிக்கும் அதன் அன்றாட அன்னதானப் பணிக்கும் பெரும் பங்காற்றிய பெரு வள்ளல் ஆகவும் சுவாமிகள் விளங்கினார்கள். அதுமட்டுமன்றி இறுதிக் காலத்தில் தனது சிந்தனையையும் செயற்பாட்டையும் இதற்காகவே செலவு செய்ததையும் எம்மால் என்றும் மறக்க முடியாத நினைவுகளாக உள்ளன.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை யின் ஆத்மீகப் பணிகளைக் கண்டு அகமகிழ்ந்தது மட்டுமன்றி எம்மை உற்சாகப்படுத்தி பேரவையின் பணிகளைத் தொடர்ந்து நாம் செய்து வருவதற்கு உந்து சக்தியாகவும் சுவாமிகள் விளங்கி வந்துள்ளார்கள். எமது பேரவையால் வெளியிடப் பட்ட " அருள்க் கனி " மலர் வெளியீட்டுக்கு ஆசியுரை வழங்கி அதனை வெளியீடு செய்து வைத்ததுடன் முருகன் அடியார்களை இந்த மலர் சென்றடைய வேண்டும் என்பதற்காக அதன் விற் பனைச் செயற்பாட்டின் கணிசமான பகுதியையும் தானே பொறுப்பெடுத்துக் கொண்டார்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக சந்நிதி முருகன் அமைந்திருக் கும் ஆலயத்தின் புனரமைப்பு வேலைகளும் அங்கே நடைபெறும் பூசைகளும் குறைவின்றி செயற்பட வேண்டும் என்பதற்காக அவர் மேற்கொண்ட செயற்பாடுகள் சந்நிதி வரலாற்றில் என் றும் அழியாத இடம்பெற வேண்டியனவாகும்

வாழ்க தமிழ்! வளர்க சைவம்!!

திரு. ந. அரியரத்தினம்
செயலாளர்

சந்நிதியான் ஆச்சிரம
சைவ கலை பண்பாட்டு பேரவை,
தொண்டைமானாறு.

# முருகேசு சுவாமிகளின் ஆலயத்தொண்டு

1987-ம் ஆண்டு வடமராட்சியில் இடம்பெற்ற "லிபறேசன் ஒப்பறேசனை"த் தொடர்ந்து இப்பகுதியில் இருந்த பல ஆலயங்களுக்கு அழிவுகள் ஏற்பட்டதுடன் நித்திய பூசைகளும் தடைப்பட்டன. இக்காலத்தில் தான் ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திற்கும் பாரிய அழிவுகள் ஏற்பட்டன. இக் காலத்தில் ஆலயத்தை புனரமைப்புச் செய்து நித்திய பூசைகளை ஆரம்பிக்க வேண்டிய அவசிய தேவை எம்மை எதிர்நோக்கியது. ஆனால் அதற்குரிய வழி தெரியாது நாம் கலங்கியிருந்த வேளையில் முருகேசு சுவாமிகள் தானாக முன்வந்து அந்த நெருக்கடியான காலகட்டத்தில் பொறுப்பெடுத்து புனரமைப்பை சிறப்பாக செய்து முடித்தார்கள். புனரமைப்பைத் தொடர்ந்து 45 நாட்கள் அபிஷேகம் நடைபெற்று நித்திய பூசைகளும் ஆரம்பிக்கப்பட்டன. இவ்வாறு முருகேசு சுவாமிகளின் முயற்சியினால் திரும்பவும் ஆரம்பிக்கப்பட்ட நித்திய பூசை 1987ன் பின் எவ்வளவோ நெருக்கடிகள் ஏற்பட்ட நிலையிலும் இன்றுவரை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது


இதைத் தொடர்ந்து எமது ஆலயத்திற்கு மிக அவசியமாகத் தேவைப்படும் மடப்பொழி ஒன்றை அமைக்கும் முழுப் பொறுப்பையும் சுவாமிகளே பொறுப்பெடுத்து செய்து முடித்ததையும் நாம் இவ்விடத்தில் குறிப்பிடுவது பொருத்தமானது. தற்பொழுது எம்மால் புதிதாக அமைக்கப்பட்டுவரும் வெளி மண்டபத்திற்கான வேலைகளுக்கும் கணிசமான ஒத்துழைப்பை வழங்கிக் கொண்டிருந்த வேளையிலேயே சுவாமிகள் இறைவனடி சேர்ந்துள்ளார்கள். ஆனாலும் சுவாமிகளின் ஒத்துழைப்புடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த பணியும் எந்தவித குறையுமின்றி சிறப்பாக முற்றுப்பெறுவதற்கு முருகனடியார்கள் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு.



திருவிழா கந்தசஷ்டி போன்ற சிறப்புக் காலங்களில் முருகப் பெருமானுக்கு விசேஷ பூசைகள் அபிஷேகங்கள் போன்றவற்றை தானும் மேற்கொண்டு ஏனைய முருக பக்தர்களையும் மேற்கொள்ளச் செய்யும் வழக்கத்தையும் முருகேசு சுவாமிகள் கொண்டிருந்தமை அவரது பக்தியின் ஆழத்தை எல்லோருக்கும் வெளிப்படுத்தும் செயலாக அமைந்துள்ளது.

ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயம்
தொண்டைமனாறு.

**த. பாலசுப்பிரமணிய ஐயர்**
ஆலயகுரு,
திருப்பணிச்சபைத் தலைவர்



# அறநெறிச் செல்வர் முருகேசு சுவாமிகள்
## ஒரு கலங்கரை விளக்கம்

தனி மனிதன் ஒருவனாக தனது நிலையில் நின்று அன்பு வழியில் நீதி (உண்மை) தவறாது தனக்குரிய கடமையைச் செய்து அறநெறியில் வாழ்ந்து அறநெறி வளர்ச்சியடைய வழி வகுத்து எம் உள்ளமெல்லாம் கொள்ளை கொண்ட ஒரு மகாத்மாவாகின்றார். அவர் காட்டிய அறநெறிச் சமுதாய வாழ்க்கை பண்புடமை, அன்பு யாவும் அனைவராலும் மறக்க முடியாதவை. அறநெறிப் பண்புகள் ஓங்க ஒரு வழிகாட்டியாக முருகேசு சுவாமியவர்கள் அமைந்தது எமது சமுதாயத்திற்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்து வந்த தமிழ் மூதறிஞர்கள், நாயன்மார்கள், சமய குரவர்கள், முனிவர்கள் ஆகியோர் சுயநலன் கருதாது, உண்மை தவறாது கடும் உடல் உழைப்புடன் சிக்கன வாழ்க்கை வாழ்ந்து யாராவது ஒரு அநாதைக்கு உணவு இட்ட 'பின்பே மிகுதியை தங்கள் உணவாக கொண்டுள்ளதை புராணங்கள் நமக்கு எடுத்தியம்புகின்றன.

இந்தக் கருத்தை நன்றாக உணர்ந்த நமது சுவாமியவர்கள் இந்த நெருகடியான காலகட்டத்திலும் தனது நற்பணியை சேவையை தொடர்ந்து நின்றவர் அறநெறியைக் கடைப்பிடிப்போர் தாம் நினைக்கும் நற்செயல்களை விரைவில் அடைந்தே தீருவர் இது உண்மையிலும் உண்மை.

ஒருவருடைய பண்பு. அருமை பெருமைகளை எப்படி உணரலாம் என்பதற்கு உதாரண புருஷராக இருப்பவர் சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகி திரு மோகனதாஸ் அவர்களாகும். அவரின் ஆதரவுடன் திரு முருகேசு சுவாமியார் தலைமையில் சந்நிதி முருகன் ஆலயத்தில் சிறப்பாக திரு. அன்னைதாசன் அவர்களின் கந்தன் கனியமுத நூலையும் ஒலி நாடாவையும்



வெளியிட்டு வைக்கும் பாக்கியத்துடன் சுவாமி அவர்களின் ஆசியும் பெற கிடைத்தது எனக்கு பெரும்பேறாகும்.

முருகேசு சுவாமியவர்கள் காலம் அறிந்து தமது தேகத்தை நீத்தாலும் அவரின் நற்பணிகள் தொடர்ந்து நடைபெறவும், அவரின் எண்ணம் ஈடேறவும் ஆத்மா சாந்தியடையவும் முருகப் பெருமானை இறைஞ்சுகிறேன்.

— ஓம் சாந்தி —

அருள்நெறித்தொண்டர்
**சிவ- ஆறுமுகசாமி**
சமாதான நீதவான்

கொக்குவில்







# முருகனை உணர்ந்த முருகேசுச் சுவாமிகள்

காயமே கோயிலாகக் கொண்டவன் எம்மிறைவன் என்பது இந்துக்களின் இயல்பான கொள்கை. மாதவன் மனிதனூடாக அவ்வப்பொழுது அருள்மொழி பகர்தல் பாரறிந்த, பக்தர்கள் உணர்ந்த உண்மை இந்த வகையில் அருளாளர்களை உணர்வதற்கும் அவன் அருள்வேண்டும்.

அவ்வருளாளர் வரிசையில் தவத்திரு முருகேசுச் சுவாமிகளூடாக ஆற்றங்கரையானின் அநுபூதியினை அனுபவித்த அடியார்கள் பலர். பலர் அவர் திருவடித் தாமரைகளை வணங்கி அவர் இன்னருளால் இன்னல் களைந்து இன்புறுவதை நிதர்சனமாகக் கண்டவர்களில் அடியேனும் ஒருவன். கந்தன் கனியமுதை தானுமருந்தி அடியார்களையுமருந்த வைத்தவன் கந்தன். நோய் தீர்ந்தவர்கள் பலர். உளப்பிணி நீங்கியவர் பலர். அவருக்குப்பணி செய்து அருட்தொண்டு செய்து அவர் வார்த்தைகளின்படி அன்னதானத் திருப்பணியைச் சிறப்பித்தவர்கள் பலர்.

முருகன் இம்முருகேசுச் சுவாமிகளூடாக முறுவல் காட்டி நின்றான். பல அருளாளர்கள் வாழ்ந்த, வாழ்கின்ற, வாழப்போகும் திருப்பூமி இச் செல்வச்சந்நிதி இப்போ எங்கள் கந்தன் கூட்டை மாற்றியுள்ளான் அவ்வளவே.

தவத்திரு முருகேசுச் சுவாமிகளுடன் அளவளாவிய நாம் அனைவரும் தவப் பேறு பெற்றவர்களே அவரின் திருநாமம் செப்பி அவர் எம்மிடம் விட்டுச் சென்ற அருட்பணியாம் அன்னதானப்பணி சிறக்க நாம் அனைவரும் அர்ப்பணிப்போடு அவர் அரவணைத்த சந்நிதியான் ஆச்சிரமப் பணி சிறப்புற நடைபெற ஆவன செய்வோமாக.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
எம் அழகனை இறைஞ்சும்
அன்னைதாசன்
**க. ஆனந்தராசா**
ஆசிரியர்

உரும்பிராய்

# மறக்க முடியாத சுவாமிகள்

பல வருடங்களுக்கு முன் நோய்வாய்ப்பட்ட ஒரு பெரியவர் பிறவிப் பெருநோய் அகற்றும் செல்வச் சந்நிதிப் பெருமான் முன்மண்டபத்தில் தன் உடல் நோயால் அவதிப்பட்ட வண்ணம் படுத்திருந்தார்கள். அவருடன் அவர் மனைவியாரும் இன்னும் சிலரும் கூட இருந்தார்கள் சந்நிதியை இருப்பிடமாகக் கொண்ட நான் எப்போதும்போல காலை வணக்கத்திற்காக ஆலயத்திற்கு சென்றேன். முன்மண்டபத்தில் அப்பெரியவர் நோயின் கொடுமை தாங்காமல் 'முருகா முருகா' என்று புலம்பிய வண்ணம் தொழுத கையுடன் படுத்த படுக்கையாக கிடக்கக் கண்டேன். இந்நிலையை அவதானித்த என் மனம் வேதனைப்பட்டது. கொஞ்நேரம் மௌனமாக நின்று விட்டு மெதுவாக அவரிடம் சென்று அருகில் நின்ற அம்மாவிடம் என்ன நடந்தது? யார் நீங்கள்? சொந்த இருப்பிடம் எது? படுத்திருக்கும் ஐயாவிற்கு என்ன வருத்தம்? என்று விசாரித்தேன் அவர் தாங்கள் இருப்பது பருத்தித்துறை தும்பளை என்றும் அவருடைய பெயர் முருகேசு என்றும் சிங்கள நாட்டில் கடைகள் வைத்திருப்பதாகவும் கொஞ்ச நாட்களுக்கு முன்னதாக வயிற்றில் சூலை நோய் ஏற்பட்டு அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார் என்றும் நாங்கள் கொழும்பிலும் வேறு இடங்களிலும் உள்ள சிறந்த வைத்தியர்களைக் கொண்டு சிகிச்சை அளித்தும் நிலைமை சீராகவில்லை பதிலுக்கு கூடிக் கொண்டுதான் இருந்தது. இந்நிலையில் ஒரு நாள் என் கணவர் தெரிசனத்தில் செல்வச் சந்நிதி முருகன் தோன்றி "முருகேசா நீ என்னிடத்திற்கு உடனடியாக வந்துசேர்" எனக் கட்டளையிட்டு மறைந்துவிட்டார் என்று கூறி உடனடியாக சந்நிதிக்கு கொண்டு போகும்படி எனக்குக் கட்டளை இட்டார். அதன்படி இங்கு வந்துள்ளோம் என்றும் கலங்கிய கண்களுடன் கூறினார். இந்நிலைமையைக் கேட்டு எனக்கு என்னையுமறியாத அன்பும், பரிதாபமும், பயபக்தியும் உண்டாயிற்று அன்று முதல் அவர்களுக்கும் எனக்கும் தொடர்பு எற்பட்டது. பின்னர்

பிரிக்கமுடியாத இறுக்கமான தொடர்பாக இன்றுவரை நிலைத்து விட்டது. இந் நிலையில் முருகேசு ஐயா அவர்கள் முருகன் தனக்கு ஒரு வயதான மூதாட்டிபோல அருகில் வந்து 3 நாட்களுக்கு புளியமிலைஅவித்துக் குடித்தால் உனது உடலில் உள்ள எல்லா நோய்களும் தீரும் என்று கூறிச் சென்றுவிட்டார். அதன் படி சுவாமிகள் செய்ததின் பிரகாரம் நோய் படிப்படியாகக் குறைந்துசில நாட்களில் அறவே தீர்ந்துவிட்டது. அன்றைக்கே மனைவி முருகன் வாசலில் நின்று கைகூப்பி வணங்கி முருகா இன்று தொடக்கம் என்கணவர் எனக்கு உரியவரல்ல உனக்கே என்றும் அடிமைத் தொண்டன் என்று சத்தியம் பண்ணி அவருக்கே கணவரை ஒப்புவித்து அன்னதானமுங் கொடுத்து தங்கள் இருவருக்குமுள்ள பந்தபாசங்களை முருகன் திருவடிக்கு சமர்ப்பணம் செய்து தனது சொந்த ஊரான தும்பளைக்குச் சென்றுவிட்டார்.

அதன்பின் முருகேசு ஐயா முருகன் தொண்டுகளில் ஈடுபட்டு அவருடைய இடத்தையே தன் இருப்பிடமாகக் கொண்டார். சில சமயங்களில் முருகன் வாசலில் இருந்து அப்பருக்கு சூலை நோயைக் கொடுத்து ஆட்கொண்டதுபோல் இந்த ஏழை அற்பனையும் ஆட்கொண்டாயே முருகா உன்னுடைய பேரருளை யார் அறிவார் என்று சொல்லி அழுவார், இவைகளை எல்லாம் தினம் முருகன் சந்நிதிக்கு வரும் அடியார்கள் கண்டு பரவசமடைந்து வாயார முருகேசு சுவாமிகள் என்று வாழ்த்தி அவரின் கரத்தால் விபூதி வாங்கி திருவடிகளை வணங்கி ஆசி பெற்று செல்வார்கள். காலஞ் செல்லச்செல்ல சுவாமி அவர்களின் பெருமைகளையும் செயல்களையும் பார்த்தும் கேள்வியும்பட்ட அடியவர்கள் கூட்டம் நாளாந்தம் அவரை தரிசிக்கவும் நோய்களைக்கூறி விபூதி பெற்றுச் செல்லவும் தொடங்கினர்.

தற்போது முருகன் ஆலய முன்மண்டபக் கட்டிடத் திருப்பணிக்கு நோய்வாய்பட்டிருக்கும் தருணத்திலும் கணிசமான நிதியுதவி அளித்து திருப்பணி பூர்த்தியடைய ஆசிவழங்கினார். சில அடியார்களுக்கு சந்நிதியானுக்கு அபிஷேகம் செய்வித்து அன்னதானங் கொடுத்தால் உன் குறை தீர்ந்து சுகமடைவாய் என்று முருகன் வாக்காகக் கூறுவார். அதன்படி அந்த அடிய



வர் நேர்த்திக்கடனை தான் முன்னின்று நடத்தி வைப்பார். அதன்படி அந்த அடியார் குறையை முருகன் நிறைவேற்றி வைப்பான். சில அடியார்களுக்கு கோயிலில் மடப்பள்ளி, களஞ்சியறை முதலியன உடைந்துவிட்டது அந்தத் திருப் பணியை நீ செய் என்று கூறுவார். அவர்கள் அதற்குரிய பணம் முழுவதையும் சாமியாரிடம் கட்டிவிட்டுப் போவார்கள். அவரே முன்னின்று கட்டுவித்து அபிஷேகம் செய்வித்து அன்ன தானம் செய்து அவர்களின் நேர்த்தியை முடித்துக்கொடுத்து மகிழ்வார். தற்போதுள்ள மடப்பள்ளி, களஞ்சிய அறை எல் லாம் முருகேசு சுவாமிகளின் திருப்பணியே. சிலகாலம் பூசை களில்லாமல் முருகன் கதவுகள் தாளிடப்பட்டிருந்தன. முரு கேசு சுவாமிகள் இதைக்கண்டு மனந்தாழாமல் முருகனிடம் முறையிட்டு முருகனின் வாசல் திறக்க வேண்டும். பூசைகள் நடக்க வேண்டும் என்று அவரிடம் வேண்டியதன் பிரகாரம் அடியவர்களின் உதவியுடன் கோவில் புனருத்தாரணம் செய் வித்து முருகேசு சுவாமிகள் வேண்டிய குருவான சிவஸ்ரீ. வி. தெய்வேந்திர ஐயர் அவர்களின் உதவியுடன் கும்பாபிஷேகம் செய்வித்து 45 நாட்கள் அபிஷேகம் செய்வித்து கடைசியாக மண்டலாபிஷேகம் பூர்த்தி செய்து நித்தியபூசை செய்வதற்கு கதவு திறந்துவிட்ட பெருமை முருகேசு சுவாமிகளுக்கே உரியது சந்நிதியில் ஒரு காலத்தில் பல அன்னதான மண்டபங்கள் இருந்தன. சென்ற ஆண்டுகளில் நடைபெற்ற யுத்த அசம்பா விதங்களினால் ஷெல்லினால் அடிபட்டு மடங்கள் சில ஓரளவு சில முற்றாக உடைபட்டு அழிந்துவிட்டது. இந்த நிலையில் அடியார் மடமும், சந்நிதியான் ஆச்சிரமமும் மாத்திரமே தங் களால் இயன்ற பணியைச் செய்து வந்தன,

ஒரு கட்டத்தில் சந்நிதியான் ஆச்சிரமம் தனி ஒருவரின் இடத்தில் தனது பணியைச் செய்து வந்தது, அது தனியான இடத்தின் சொந்தக்காரன் தனக்கு இடம் உடனடித் தேவை என்று ஒரு மாத குறுகிய நோட்டீஸ் விட்டு கஷ்டத்தை ஏற் படுத்தினார் இதை முருகேசு சுவாமிகள் அறிந்து ஆச்சிரம நிர்வாகியைச் சந்தித்து நிலைமையை விசாரித்து அறிந்து நீங் கள் ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம் என்று கூறி சந்நிதியான்

ஆச்சிரமத்திற்கென்று முருகேசு சுவாமிகளின் வேண்டிய ஒரு தனவந்தர் திரு ச தங்கராசா ஐயா அவர்களால் வழங்கப் பட்ட ஆதனத்தில் நாளை மறுநாள் அத்திவாரம் போட்டு வேலை ஆரம்பிக்க வேண்டுமென்று கூறி அதன்படி சுவாமி திருக்கரத்தால் ஆரம்பிக்கப்பட்டு குறுகிய காலத்தில் ஓரளவு மடம் உண்டாக்கி 1994-ம் ஆண்டு வைகாசி மாதம் பூர்த்தி செய்து முருகேசு சுவாமி அவர்களின் தலைமையில் நல்லை ஆதீனம் பரமாச்சாரிய சுவாமிகளால் திறந்து வைக்கப்பட்டு முருகன் பேரருளால் ஒரு குறைவுமின்றி அன்னதானப்பணி வாரி வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

ஆ. அருணாசலம்
சுவாமிகளின் தொண்டர்



# செல்வச் சந்நிதியில் சீரிய தொண்டுகள்

1997 பங்குனி மாத பூர்வபக்க திருவாதிரை நட்சத்திரத்தில் பரமபதம்மெய்திய தும்பளையைச் சேர்ந்த உயர்திரு வே. முருகேசு சுவாமியார் அவர்கள் தமது வாழ் நாளிலே பொதுவாக பல நன்மைக் காரியங்களையே செய்து வந்ததை எல்லோரும் அறிவர். தமது உற்றார் உறவினருடன் வாழ்ந்த காலத்தில் வேண்டியவர்கட்கு பல உதவிகளை செய்ததோடு சாஸ்திர கலையையும் கற்று "சாஸ்த்திரியார்" என மதிக்கப்பட்டார். நமது நாட்டின் பல பகுதிகட்கும் சென்று வர்த்தக தொழிலையும், கமத்தொழிலையும் செய்தார். அத்துடன் சமய வழிபாட்டிற்காக திவ்விய ஸ்தலங்கட்கெல்லாம் சென்று மிக்க இறைபக்தியும் கொண்டிருந்தார்.

1975-ஆம் ஆண்டில் அவருக்கு ஏற்பட்ட சுகயீனம் காரணமாக தொழில் முயற்சிகளை கைவிட்டு இறை வழிபாட்டிலேயே நாட்டத்தை செலுத்தினார் அவரது இறை நம்பிக்கைக்கு செல்வச்சந்நிதி முருகப்பெருமான் அனுக்கிரகம் பாலித்த தன்மையினால் அவரிற்கேற்பட்ட துன்பங்கள் தீர்க்கப்பட்டன இதனால் செல்வச்சந்நிதி முருகப் பெருமான்மீது அளவற்ற பக்தி உண்டானது. நாளடைவில் முருகப் பெருமானது அருளொளி இவர் மீது பிரகாசமானதால் அடியார்களும் மிக்க மதிப்புக் கொண்டு 'சுவாமியார்' என அழைக்கப்படலானார். உயர்திரு வே. முருகேசுசுவாமியார் அவர்கள் செல்வச்சந்நிதி முருகப் பெருமான்மீது தாம் கொண்டுள்ள பக்தியை தம்முடன் சேர்ந்த அடியார்களும் அவ்வாறே பக்தி செலுத்தவும் தொண்டுப் பணிகளில் ஈடுபடவும் முயற்சித்தார். 1982-ஆம் ஆண்டு செல்வச்சந்நிதி முருகப் பெருமானுக்கு உருவாக்கப்பட்ட சித்திரத் தேருக்கு இவரதும் அடியார்களினதும் பல முயற்சிகள் பெரும் பங்காக அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது

துரதிர்ஸ்ட வசமாக 1986-ல் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களால் பெருமான் ஆலயம் உடைமைகள், சித்திரத்தேர் ஆகியன பெரும் சேதமானதுடன் பூசை வழிபாடுகளும் இடைநிறுத்தம் செய்யப்பட்டபோது மிகவும் வேதனை அடைந்தார். அந் நாட்களில் கைதடிப் பகுதியில் செல்வச் சந்நிதிப் பெரு





மானை பக்தியுடன் வேண்டுதல் செய்தார். நிலைமை சுமுகமானதும் மனநிறைவுடன் செல்வச்சந்நிதி ஆலய உரிமையாளர்களுடன் அடிக்கடி தொடர்பு கொண்டு தமது அடியார்களையும் ஊக்குவித்து சேதமடைந்த ஆலயத்தை சீரமைத்து உடமைகளையும் உருவாக்க அரும்பாடுபட்டார். இத் தன்மையால் ஆலயம் சீக்கிரமே பொலிவு பெற்று கும்பாபிஷேகம் நடைபெற முடிந்தது. அத்துடன் ஆலயப் பகுதியில் அடியார்கட்கு அமுதளிக்கும் பணியினையும் செவ்வனே செய்து வந்தார். அன்று அவர் ஆற்றிய சீரிய சேவைகளினால் இன்றுவரை செல்வச் சந்நிதி ஆலயத்தில் முருகப் பெருமானது பூஜை வழிபாடுகளும் மற்றும் வழமையான கைங்கரியங்களும் இடையூறின்றி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஆலயத்தின் முன் மண்டபத்தை ஸ்திரமாக்கி சிறப்பாக்க விரும்பி முழு மூச்சுடன் ஈடுபட்டார் அவரது இம் முயற்சி கைகூடுமுன்பே எம்மைவிட்டுப் பிரிந்தமை வருத்தமாகத்தான் இருக்கின்றது. ஆனாலும் அவரது நல்லெண்ண முயற்சியும் பக்தியும் இவ் ஆலயப் பகுதியில் நிலைகொண்டு இனிது நிறைவுறும் என்பதில் சந்தேகமே இல்லை காலஞ்சென்ற எனது தந்தையார் திரு செ விசாகரத்தின ஐயருடன் சுவாமியார் அவர்கள் நன்கு பழகியதால் தந்தைக்குப் பின் ஆலய பணிகள் தொடர்பாக சுவாமியாருடன் பழகும் வாய்ப்பு எனக்கும் கிட்டியது. அவரும் என்னுடன் மிகுந்த பாசத்துடன் பழகிக் கொண்டார் அவரை "அப்பர் சுவாமிகளாக" பெருமதிப்புடன் போற்றுகிறேன் செல்வச் சந்நிதி பெருமான் மீது அவர் கொண்ட பக்தி தொண்டுகளை தொடர்ந்தும் நாம் மேற்கொண்டு சிறப்பாக்குவதே திருப்தியான செயற்பாடு எனக் கருதி ஈடுபடுவோமாக. பெருமானின் கருணை ஒளி பெற்ற சுவாமியார் என்றென்றும் எம் அனைவர் நெஞ்சங்களிலும் நிறைந்திருக்க பெருமான் அருள்வாராக.

— ஓம் சாந்தி —

செல்வச்சந்நிதி
தொண்டைமானாறு

வி. தெய்வேந்திரஐயர்

உ
குகமயம்



# தும்பளை ஈன்றெடுத்த முருகேசு சுவாமிகள்

மலர்வு ; 23 - 05 - 1920 முத்தி : 16 - 03 - 1997

இந்துமா சமுத்திரத்தான் ஈன்ற நித்திலம் என்று அழைக்கப்படும் ஈழத்தில் அமைந்த வந்தனைக்குரிய சான்றோர்கள் வாய்ந்த செந்தமிழ் கொழிக்கும் நா டு யாழ்ப்பாணமாகும். யாழ்ப்பாணத்திலே சீரிய பிரிவில் ஒன்றாய்த் திகழும் வடமராட்சியில் உள்ள நல்ல பகுதியில் விளங்குவது தும்பை ஊர். மருத்துவர், வணிகர், சோதிடர் அந்தணர், பொருத்தமாய் பொருள் விற்போர், புகழ்மிகு நடிகர் விருத்தியாய் வாழ்ந்தவூர் தும்பளை என்னும் ஊராகும்.

இவ்வூரின்கண் சைவ வேளாண்குல மரபிலே தோன்றிய வேலுப்பிள்ளை இலட்சுமிப்பிள்ளைத் தம்பதிகள் வாழ்ந்து வந்தார்கள் இவர்களுக்கு 23 - -5 - 1920 இல் முற்பிறப்பில் செய்த தவப்பயனால். அவரை நம்பி அணுகிய அடியார்களுக்கு அருள் புரியும் தவப்புதல்வன் ஒன்றைப் பெற்றெடுத்தார்கள். இவருக்குப் பின் இரு சகோதரிகளும் பிறந்தனர். இவ் ஆண்குழந்தை பிற்காலத்தில் முருகன் அடிமையாகவும், கந்தக் கடவுளுக்கு சேவை செய்ய வேண்டும் என்று எண்ணியோ இவருக்கு சண்முகசுந்தரம் என் று பெயரிட்டனர். இச் சண்முகசுந்தரமே பிற்காலத்தில் ஆத்ம ஒளியை எங்கும் வீசிய உயர்திரு. முருகேசுச் சாமியார் அவர்கள்.

சிறு வயதிலே இவரின் தாய் தந்தையார் இறந்தபடியால் இவரை வளர்த்து ஆளாக்கியவர்கள் சிறிய தந்தையார் கந்தையாவும், சிறிய தாயார் தங்கம்மாவும் ஆகும்.

இவர் சிறுவயதிலே கல்வி ஞானத்தில் சிறந்து விளங்கினார். தனது மாமனாகிய சோதிடர் வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளையிடம் சோதிடமும் பயின்றார். பின்பு . குடும்பப்

பாரத்தைச் சுமக்கவும். சகோதரிகளைக் காப்பாற்றவும் வன்னி நாடு சென்று மதவாச்சியில் கடை திறந்து வாணிபத்தில் ஈடு பட்டார்.

ஊரில் உள்ள பெரியோர்கள் இவரை இல்லறத்தில் ஈடு படச் செய்வதற்காக தும்பளையைச் சேர்ந்த அன்னபூரணம் என்ற மாதை கடிமணம் செய்வித்தனர். பிற்காலத்தில் இவர் துறவு பூண்டு மக்களுக்கு அருளாசி அளிக்கவேண்டும் என்று எண்ணியோ இவரது மனைவியை சிறிது காலத்தின்பின் இறை வன் எடுத்துக் கொண்டுவிட்டார் பின்பு இக்கிராமத்தைச் சேர்ந்த பாக்கியம் என்ற பெண்மணியை மணந்தார்.

1958 ம் ஆண்டு நடைபெற்ற கலவரத்திலே இவருடைய வியாபார ஸ்தாபனங்கள் எல்லாம் அழிக்கப்பட்டு விட்டன. எனவே இவருடன் எனது உறவினர்களும் சேர்ந்து வவுனியா மாவட்டத்தின் வடக்கே உள்ள புதுக்குளம் என்ற கிராமத்தை அடைந்தனர்.

இப்புதிய கிராமத்தை சண்முகசுந்தரம் அவர்களும் ஏனை யோரும் அபிவிருத்தி செய்து வேளாண்மை வியாபாரம் முத லியவற்றைச் செவ்வனே நடாத்தி வந்தார்கள்.

திருநாவுக்கரசு நாயனாரை சூலைநோய் உண்டாக்கி இறை வன் ஆட்கொண்டதுபோல் சந்நிதி முருகனும் இவருக்கு நோயை உண்டாக்கி ஆட்கொண்டார் பல வைத்தியம் செய்து கைகூடாமல் இவருடைய மனைவியரும் சந்நிதி கோயி லுக்கு சென்று முருகனிடம் அடைக்கலமாக சண்முகசுந்தரத் தைவிட்டு குணமாக்கும்படி வேண்டிக்கொண்டார். இவருடைய நோயும் இறைவன் அருளால் நீங்கப்பெற்றது. அன்று தொடக் கம் இவர் முருகன் அடிமையானார்.

இவருக்கு இல்வாழ்க்கை ஏற்புடையதல்ல என்று எண்ணி இறைவன் இவரது இரண்டாவது மனைவியையும் எடுத்துக் கொண்டார். பந்தபாசம் அறுக்கும் நோக்கத்துடன் இவருக்கு இறைவன் இவருடைய மணவினையால் மழலைச் செல்வங்களை கொடுக்கவில்லை.



வடஇந்தியாவில் உள்ள காசித் தலத்திற்கு சிறியதகப்பன் கந்தையாவுடன் சென்று அவரின் அனுமதியுடன் துறவறம் பெற்றுக்கொண்டார். முருகேசு சுவாமியாராக பரிபூரணம் பெற்ற ஆத்மாவாக பேரொளி எங்கும் பரப்பும் வண்ணமாக உலாவ புறப்பட்டார்.

இவருடைய மகிமை நாளுக்குநாள் பரவி வந்தது. அவரிடம் நாடிவரும் பக்தர்கள் அவரைத் தரிசித்துவிட்டு பரிபூரண திருப்தியுடன் திரும்பி வருவார்கள். இவருடைய நல்வாக்கு எப்பொழுதும் பலிதமாக வந்தமையால் இவருடைய அடியார் கூட்டம் நாளுக்குநாள் பெருகி வந்தது. இவருடைய முகத்திலும், மேனியிலும் முருகன் அருள் ஒளி விளங்கிக் கொண்டிருந்தது. இவருடைய பக்தர்களில் ஒருவரான கந்தையா குடும்பத்தினர் இவருடன் நெருங்கிய பக்தி கொண்டவர்களாக இருந்து வந்துள்ளனர் இவருடைய அன்பினால் வெளிநாடு சென்று அங்குள்ள பக்தர்களுக்கு ஆசி கூறினார், இதனால் வெளிநாட்டில் வசிக்கும் சைவ அன்பர்களும் பயன்பெற்றார்கள். வெளிநாடுகளில் வசிக்கும் இவருடைய மகிமையால் பயன்பெற்ற அடியார்கள் இவரின் ஆணைக்காக எப்போதும் காத்திருந்தார்கள்.

சந்நிதி கோயிலுக்கு கும்பாபிஷேகம் செய்வதில் இவர் முழுமூச்சாக ஈடுபட்டார். வெளிநாட்டிலும், உள்நாட்டிலுமுள்ள பக்தர்கள் இவருக்கு வேண்டிய உதவி செய்ததால் இவர் சந்நிதியானின் கும்பாபிஷேகத்தை செவ்வனே நடாத்தி முடித்தார். மடப்பள்ளித் திருப்பணியையும் செய்து முடித்தார்.

இவர் சந்நிதியில் அடியார் மடத்தில் தங்கியிருந்து முருகனுக்குச் சேவை செய்து வந்தார். பின்பு சந்நிதியான் ஆச்சிரமத்துடன் ஈடுபாடு கொண்டிருந்தார் சந்நிதியான் ஆச்சிரமத்தை நடாத்தும் திரு. மோகனதாஸ் அவர்கள் இவருடைய சிறந்த பக்தர். முருகேசுசுவாமி அவர்களின் ஆசியினாலும், சந்நிதிக் கந்தன் அருளினாலும் திரு. மோகனதாஸ் அவர்கள் சந்நிதியான் ஆச்சிரமத்தில் தினந்தோறும் அடியார்களுக்கு அன்ன

தானம் வழங்கியும் கலை பண்பாட்டுக் கழகம் அமைத்தும், சமயச் சொற்பொழிவுகள் ஏற்படுத்தியும் சைவ மதத்திற்கு பேருதவி செய்து வருகின்றார்

ஒரு சமயம் சந்நிதி திருவிழா இல்லாத காலத்தில் தம்முடைய பிறந்த ஊராகிய தும்பளைக் கிராமத்தில் தங்கி கந்தனுக்குப் பூசை செய்து அடியார்களுக்கு அன்னதானம் வழங்கினார்.

சந்நிதி கோயில் திருப்பணிகள் யாவும் முருகேசு சுவாமிகளின் திட்டப்படியே செய்யவேண்டும் என்பது சந்நிதிக் கந்தனின் விருப்பம் என்று நான் கேள்வியுற்றேன். இவர் தங்கியிருந்த இல்லங்களும் சுற்றாடல்களும் இவர் தங்கியிருந்த காலத்தில் அப்பகுதியில் உள்ள மக்கள்களும் அப்பலனைப் பெற்றும், மகிழ்ச்சியோடும் வாழ்ந்து வந்தார்கள் இவருடைய வாக்கை சந்நிதிக் கந்தனுடைய வாக்காகவே பக்தர்கள் அடிபணிந்து செயற்பட்டார்கள்; பயனடைந்தார்கள்

நாவுக்கரசர் உழவாரத் தொண்டு செய்து ஆண்டவனைப் பூசித்ததுபோல் இவரும் தனது இறுதி மூச்சுவரை சந்நிதிக் கந்தனுக்கு தொண்டு புரிந்து வந்தார் இவர் பூதவுடலை நீக்கிய செய்தி கேட்டு நாம் கலங்கினோம். ஆனால் இவர் சாதாரண மனிதர்போல் பிறப்பெடுப்பதற்கு நீங்கவில்லை. இவருடைய ஆத்மா சந்நிதியான் காலடியில் கலந்துள்ளது என்று நாம் நம்புகிறோம். முருகனோடு இரண்டறக் கலந்து என்றும் அடியார்களை நல்வழிப்படுத்திக்கொண்டே இருப்பார்

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

**சி. முருகேசபிள்ளை** *B A. (Lond)*
(ஒய்வுபெற்ற கூட்டுறவு அபிவிருத்தி
உதவி ஆணையாளரும், உதவி அரசாங்க அதிபரும்)

தும்பளை,
பருத்தித்துறை.



# எங்கள் குருநாதன்

1994 ம் ஆண்டளவில் நானும் எனது சகோதரர்களும் கொழும்பில் வெளிநாட்டு பிரயாண முகவர்களாக செயல்பட்டு வந்தோம். திடீரென ஒரு வெளிநாட்டு முகவரால் பல லட்ச ரூபாய்க்கு ஏமாற்றப்பட்டோம். அதனால் அங்கு தொழில் செய்ய முடியாத நிலை இந் நிலையில் எங்களிடம் இருந்த சில சொத்துக்களை விற்று சிலரின் பணத்தை திருப்பி கொடுத்தோம். மிகுதியானவர்களுக்கு கொடுக்கமுடியாத நிலையில் கஸ்டப்பட்டு கொண்டு இருந்தோம். இந் நிலையில் சுவாமியாரின் நெருங்கிய பக்தர்களில் ஒருவரும் எனது மைத்துனர் சிவநேசன் என்பவரால் (தற்போது இலங்கை வங்கி கொழும்பு நகர அலுவலகத்தில் வேலை செய்பவர்) சந்நிதி முருகனால் அனுப்பப்பட்ட அவதார புருசர் முருகேசு சுவாமிகள் என அழைக்கப்பட்ட பெருமானைச் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது அன்றிலிருந்து கருமேகக்கரு கரையத் தொடங்கியது சகோதரன் நேர்முகமாக கொழும்பால் போகமுடியாதநிலையில் வள்ளத்தின் மூலம் "இந்தியாவுக்குப் போய் கிறீஸ் என்னும் நாட்டுக்குப் போய் பணத்தை தேடிகொடுக்க வேண்டியவர்களின் பணத்தைக் கொடுத்தோம். நாம் தொலைத்த சொத்துக்களைத் தேடினோம். வள்ளத்துடன் போய் கப்பலுடன் வா என்று சொன்னார் அதன்படி இன்று அந்நாட்டில் கப்பலுக்கு அதிபதியாக இருக்கிறார். சொல்லுவதெல்லாம் தெய்வ வாக்காகும் அவரின் தெய்வ வாக்கை மதியாமல் நடந்த துக்ககரமான சம்பவத்தையும் நினைவுபடுத்துகிறேன்.

1987-ம் ஆண்டு எனது கைதடி கிராமத்தில் வீட்டுக்கு அருகில் ஒரு வியாபார நிலையத்தை அமைக்க அனுமதி கேட்டோம் அவர் சொன்னார் சித்திரை மாதம் தொடங்கலாம் இப்ப காலம் கூடாது என்றார். ஆனால் எனது சகோதரன் ஒருவன் விடாப்பிடியாக நின்று தை மாதத்திலே திறந்துவிட்டார் திறப்பு விழாவுக்கு வந்த சுவாமியார் சொன்னார் கால





கெதியில் கடையில் பொருள்கள் சேதம் போக இடமுண்டு அதனால் முன்னெச்சரிக்கையாக கூரையில் தடுப்பு பலகைகள் போட்டு பாதுகாக்கும்படி நாங்கள் பின்பு செய்யலாம் என இருந்தோம். மாசி மாதம் 11ம் திகதி சொன்னார் வீட்டுக்குக்கிட்ட ஏதோ அனர்த்தம் நடக்கப்போகுது அதனால், எனது மூத்த மகளையும் 3 நாட்களுக்கு வெளியில் விடாது பாதுகாப்பாக வைத்திருக்கும்படி சொல்லி தானும் அங்கு இருந்தார். ஆனால் இரண்டரை நாட்கள் முடிந்துவிட்டது. கடைசி அரை நாளில் ஏதோ சாட்டுப் போக்கு சொல்லி மகள் வீட்டிலிருந்து வெளியே போய்விட்டார். பின் பிற்பகல் 5 மணியளவில் எதிர்பாராத வெடிவிபத்தில் எனது மகளும் அயலவர்கள் கொஞ்சப்பேரும் அகப்பட்டு மரணமானார்கள் கடையும் அத்திவாரத்துடன் சரியாகிவிட்டது. திருமுருகனின் திருவாக்கை அலட்சியம் செய்ததால் பல லட்சரூபாய்களையும் கோடிபெறுமதியான உயிரையும் இழந்தோம். அவர் நடக்கப்போவதையும் நடப்பதையும் முன்கூட்டி சொல்வதில் அவருக்கு நிகர் அவர்தான். அவரின் செயல்பாடு ஏழைகளுக்கு உதவி செய்தல், ஏழைகளுக்கு அன்னதானம் இடுதல், ஏழை பிள்ளைகளை வெளிநாட்டுக்கு அனுப்பி செல்வந்தர் ஆக்கி அவர்கள் அனுப்பும் பணத்தை முருகனின் தேவைகளுக்கு செலவிடுதல் மற்றும் சந்நிதியில் உள்ள இரு அன்னதான மடங்களுக்கு அன்னதானம் வழங்குவதற்கு உதவி செய்தல் ஆகும். அவரின் அற்புதங்கள் எழுத நேரம் காலம் காணாததால் பின் புத்தக உருவில் வெளிவரும். அவர் திரும்பவும் இவ்வுலகில் வந்து மேலும்பல அடியார்களுக்கும் ஏழைகளுக்கும் அருளும் வண்ணம் எல்லாம்வல்ல செல்வச்சந்நிதி முருகனை எங்கள் குடும்பம் சார்பாகவும் கைதடியூர் அடியார்கள் சார்பாகவும் வேண்டிக் கொள்கிறேன்.

சுபம்

கைதடியூர் முருகனடிமை.

**ப. பத்மராஜன்**



உ

குகமயம்

# முருகேசு சுவாமிகளின் அற்புதம்

திரு வே. முருகேசு சுவாமிகள் தன்னுடைய பிறப்பிடமாகக் கொண்ட தும்பளையில் 1994ம் வருஷம் கடைசிப் பகுதியில் இருந்து 1996ம் வருஷம் முற்பகுதி வரையில் எங்கள் இல்லத்தில் தங்கியிருந்தார். இந்தக் காலத்தில் முருகப்பெருமானின் பூசைகள், வேறு குரு பூசைகள், அன்னதானம் செய்து பல அற்புதக் காட்சிகளைத் தந்துள்ளார் இந்த காலகட்டத்தில் பல பகுதிகளில் இருந்து பக்தர்களும் பண்டிதர்களும், கல்விமான்களும், உறவினர்களும் பொது மக்களும் கலந்து கொண்டு சுவாமியாரை தரிசித்து ஆசீர் பெற்று சென்றார்கள்

பின் தன்னுடைய சுகயீனம் காரணத்தால் வைத்திய சாலையில் அனுமதித்து பின்பு அவருடைய விருப்பத்தின்படி மீண்டும் சந்நிதிக்குப் போயிருந்தார்.

திடீர் என்று சந்நிதியில் இருந்து செய்திகேட்டு நாங்களும், அவருடைய உறவினர் அனைவரும் மிக வேதனையுடன் சந்நிதிக்குச் சென்று அவருடைய கடைசி கிரிகையில் கலந்து கொண்டு அவருடைய ஆத்மா சாந்தியடைய முருகனை வேண்டி பிரார்த்தனை செய்தோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**மைத்துனர் முத்துராஜா குடும்பத்தினர்**

**தும்பளை, பருத்தித்துறை.**



உ
குகமயம்



# எங்கள் குலதெய்வம்

ஏழைக் குடும்பத்தில் பிறந்த எங்களுக்கு ஒளிவிளக்காக எம்பெருமான் வந்து சேர்ந்தார். எமது மகன் வாய் பேசாது அரைகுறையாக இருந்தபோது சுவாமியாரின் கடாட்சம் கிடைக்கப்பெற்றபின் ஓரளவு கதைக்கத் தொடங்கிவிட்டான் தற்போது ஓரளவு நிம்மதியாக குடும்பம் நடத்தி வருகின்றோம். இனி எப்போது எம்பெருமானின் திருவுருவத்தைக் காண்போம் வெகு விரைவில் கைகூட சந்நிதிபெருமான் அருள்புரிவாராக.

கைதடியூர்,

முருகன் அடியார் கூட்ட

**சங்கரன் - சரசு**







# கருணை பொழியும் முகம் கண்டேன்

திருமுருகாவென்று ஒருதரம் சொன்னால்
உருகுது நெஞ்சம், பெருகுது கண்ணீர்.

கண்களிலே கருணை, முகத்திலே சோதி, நாவிலே அருள் வாக்கு இவையாவும் தவத்திரு முருகேசு சுவாமி அவர்களின் இலச்சினைகள் மாபெரும் முருகபக்தரான அவர் ஒரு அவதார புருஷன். அவர் சொன்னது நடக்கும் நடக்கப்போவதையே சொல்வார். முக்காலமும் உணர்ந்த மகரிஷி. அவரின் ஆசியால், அருளால் பலனடைந்தோர் எண்ணிக்கை அளப்பெரிது அன்னை போல் அணைத்து தன்னோடு பிணைப்பதில் அவருக்கு நிகர் அவரே. ஈடு இணையில்லாத தீர்க்க தரிசியான அவர் பிறர்க்கு வழி காட்டுவதில் ஒரு கலங்கரை விளக்கம். ஏழையாக பிறந்து அருட்பேழையாக இறுதிவரை வாழ்ந்தார். முருகனுக்கு அவர் அடிமை அவருக்குப் பலர் அடிமை சந்நிதிமுருகன் ஆலயத்தில் பூசையும், வழிபாடும் சிறப்பாக நடைபெற பலவிதத்திலும் பல உதவிகள் புரிந்தவர் எதிர் காலத்திலும் அவ்வாறே நடைபெற தீர்க்கதரிசியான அவர் பல ஒழுங்குகளை அமரராகுமுன் ஏற்கனவே முன்னேற்பாடாகச் செய்துவைத்துள்ளார். பலரின் மனத்துயரையும், உடல் நோயையும் தீர்த்து வைத்தவர் அடியார்களுக்கு அன்னதானமளிப்பதை ஒரு மாபெரும் தொண்டாகச் செய்து வந்தவர் தானத்தில் மட்டுமல்ல நிதானத்திலும் சிறந்தவர். பலருக்கும் ஊன்றுகோலாக நித்தியமாக, நிரந்தரமாக அடியார்களுக்கு அன்னதானமளிக்கும் பணி என்றென்றும் நடைபெறவேண்டும் என்ற பெருநோக்குடன் சந்நிதியான் ஆச்சிரமத்திற்கு அத்திவாரமிட்டது முதல், கட்டடம் அமைத்து தானே திறப்புவிழா நடாத்தி எதிர்காலத்திலும் அன்னமிடும் பணி தொடர்ந்து நடைபெறுவதற்குரிய ஆயத்தங்களையும் ஆசியையும் நல்கியுள்ளார்.

உறுதுணையாக விடிவெள்ளியாகத் திகழ்ந்த அவர் 1997 பங்குனி 16ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அமரராகிவிட்டார் அன்னார் செய்த திருப்பணிகளை நாமும் தொடர்ந்து செய்வதே நாம் அவருக்குச் செய்யும் நன்றிக்கடனாகும்.

பருமகன்
**பா. ரவீந்திரநாதன்**

தும்பளை



# எல்லாம் நீயே!

என் உயிர்க்கோர் உயிரும் நீ
என்இன் உயிர்க்குத் துணைவன் நீ
என்னை ஈன்ற அன்னை நீ
என்னுடைய அப்பன் நீ
என் அரும் பொருள் நீ
என் இதயத்து அன்பும் நீ
என் நன்னெறி நீ எனக்குரிய உறவும் நீ
என் நற்குரு நீ எனைக் கலந்த நட்பும் நீ
என்றனுடைய வாழ்வும் நீ
எனைக்காக்குந் தலைவன் நீ
கண்மூன்று தழைத்த தேவே

அன்னையினும் பெரிதினிய கருணையூட்டும்
ஆரமுதே என்னுறவே அரசே இந்த
மண்ணுலகில் அடியேனை என்னே துன்பவலையில்
அகப்பட இயற்றி மறைந்தாய், அந்தோ!
பொன்னை மதித்திடுகின்றோர் மருங்கே சூழ்ந்து
போனகமும் பொய்யுறவும் பொருந்தலாற்றேன்
என்னை உளங்கொள்ளுதியோ கொள்கிலாயோ
என்செய்வேன் என் செய்வேன்
என் செய்வேனே

Dr. N. பத்மநாதன்



உ
குகமயம்



# முக்காலமும் உணர்ந்தவர்

கடல் புடைசூழ் இலங்கா புரியின்
வடபால் பெருங்கடலுடன் தொடர் மருதோடையில்
படர்மதியால் காலமொரு மூன்றினையும்
தெரிந்துகொண்டு கந்தனடி சேர்ந்தே
கணக்கரிய தானதர்மங்கள் தொண்டுகள் செய்தே
நற்குருவாக விளக்கெனப் பிரகாசித்த
சித்தி முத்திப் பேரரசே முருகேசு சுவாமிப்
திருப்பேரமைந்த ஞானமணியே உன்
திருப்பாதம் தாழ்வாழ்க வாழ்கவே

துன்னுமறையின் முடிவிலொளிர் தூய
விளக்கே சுகப்பெருக்கே அன்னையனையாய்க்
கல்லோடைக் கந்தாவுன்ற னாறெழுத்தை
உன்னி மனத்தி னுச்சரித்திங் குயர்ந்த திரு
வெண்ணீறிட்டாற்; சென்னியணி யாயடி
சேருந் தீமையொன்றுஞ் சேராதே

பூமண மாறாச் சோலைசூழ் தும்பளை
புரத்தின் பொதுவர் தங்குலத்தோன்
புண்ணியவான் சந்நிதிக் கந்தனீன்ற
புத்திர சிகாமணியே முருகேசு சுவாமி
என்றான குருவுமாகி ஏழை ரட்சித்த
திரிகாலங் கண்டறிந்த சித்தர்களும்
திகைப் புற்றிருக்க தெரிகால மிதுவே என
மனவாக்குக் கெட்டாத சித்தரே
கல்லோடைக் கந்தன்தான் சேர்ந்த கோவே.

**திருமுருக திருநாவுக்கரசு**



உ
குகமயம்

# முருகேச திருவிரட்டை மணிமாலை

1

கண்டன்றே காவுவான் கந்தன் கவலையேன்
கொண்டபக் திக்வகொள்கை கைவிடாதே! - தொண்டாற்று
என்று சொன்ன சுவாமியின்றோ தன்தோற்றம் மாற்றினும்
நிற்கின்றார் எம்முள் நிறைந்து.

நிறைந்து நிதிபதி நீக்கமறு நிர்மல நிராமயனை
உறைந்து உளதில் உவக்க இருத்தும் உருகுமொழி
மறைந்து விளங்கு மொழியில் மிளிரும் மதிசடையில்
உறைந்து விளக்கும் அறுமுக தேசிக லுணர்ந்தவனே.

2

அவனே அளவை அளவையில் எல்லாம்
சிவனே படித்த குருவில் — சிவணிய
நெஞ்சர் குருபர முருக சுவாமியெம்
நெஞ்சின் நினைவுள் நினை.

நினைவு கனவு உறக்கம் விழிப்பு நிலைகளிலும்
முனைவு முருக முகிழ்ப்பு முயக்கினில் முந்துறுமக்
கனிவு மனத்துக் கமல அடியினை பற்றிடுமெம்
இனிவிற் குரிய இளையில் சுவாமி இறையுயர்வே!

3

உயர்வு உளது உளத்து உணர்வு
அயர்வு அறியா அன்பின் — பயனறிந்து
பக்தி நிலையைப் பரவச மூட்டிநற்
சித்தி பெறச்செய் சுகம்.

சுகமே உலகின் சுபிட்சம் அதனைச் சகசயதாய்
அகமே பிறக்க அழகு சுரக்க அறியுமென
மகவே வருக; மணமாய் முருகில் மனதுறையும்
தகவே பெறவும் தனிர்க்க வளர்த்த தவமுறையே.

4

தவமுறையே! தன்னைத் தொடர்ந்தார் தலைமுறை
பவமறப் பாடு படவச் — சிவகுமாரன்
சந்நிதிக் கந்தன் சலமிலனைச் சார்ந்திட
உந்திய உத்தம உள்ளம்

உ
குகமயம்



# 'முருகேசம்'

பிரபஞ்சத்தில் எழுவகைப் பிறப்பினுள் மானிடப் பிறப்பு மகத்தானது. அதுவும் பூரணமான ஆணாய் மன்னுயிரிற் தன்னுயிரைக் காணும் பூரணனைப் பரிபூரணமாய்ச் சரணாகதி அடையும் பக்குவியாய்த் தன்னைத் தானறியும் தக்கோனாய்ப் பிறத்தல் பிறந்து வாழ்தல் வாழ்ந்து போதல் மிக மிக அரிது அத்திருவுடையார் சரவணபவகுக சந்நிதிப் பூவரசு திருமுருகேசு சுவாமிகள் என்பது கேட்பார் மெய்சிலிர்க்கும் கண்டார் உள்ளம் குளிரும் கதைத்தார் உணர்வு ஊறும் அத்தகைய முருகேசம் அவர் என்பது இங்கு புகழுரையன்று.

அவர் தம் தோற்றம்: *1920-05-23*

இவர் தம் சிரசில் முருகன் (பாத) ஏற்றம்: *1997-03-16*

அவர் சார்ந்ததன் வண்ணம் முருகேசமானார் ஆவும் காரணமாக 1986ம் ஆண்டில் முதல் முதல் சுவாமிகளைச் சந்திக்கச் சென்றபொழுது (சிறுப்பிட்டி கந்தையா ஆசிரியர்) வீட்டுக்காரருக்குச் கால்சட்டை போட்ட பிரமச்சாரி வருகிறார். தேசிக்காய் கரைபேனை சூடி குடுப்பது குறைவு எனக்கூறி ஆயத்தம் செய்து வைத்திருந்தார்கள். யாம் சென்றோம். சுவாமிகளின் பாதங்களைத் தொட்டு வணங்கினோம். இவருக்குத்தான் தேசிக்காய் கரைக்கச் சொன்னனான் அதைக் கொண்டு வாருங்கள். உடலும் உள்ளமும் பல வெக்கைகளில் இருந்தும் குறையட்டும் என்று கூறி ஒருகுறையு மில்லையப்பா, இப்ப பிடித்திருக்கிற பிடியை இறுக இப்படியே பிடித்துக்கொள் எல்லாம் மனம்தான் ஒன்றிலும் ஒன்றுமில்லை. கலங்காதே என்று தொடங்கிய உறவு நீடித்தது. இன்று எனக்கு நீ நீறு நிறையப் பூச வேண்டு மென்றும் பல நிகழ்வுகளைக் கொண்டு அவர்களின் அன்பர் குழாம்; அடியவர் குழாம்களில் யாம் மிக அற்பம் என்பது தெளிவு.

அவர்பற்றிச் சொல்வதற்கு எமக்கு என்ன அருகதை, அவர் பணி நிற்பது எம் தலையாய பணி. அப்பணிக்குள்

சிகரம் வைத்தாற் போன்றது, சந்நிதியான் ஆச்சிரம க. ப. பேரவை. அதன் உபந்நியாச, கலை, நிகழ்ச்சிகள் அன்னதான சகிதம் நடத்துவது எம் சைவர்களின் பாரம்பரியமாய் சிறுத் தொண்டர் கூட்டச் செந்நெறி என்பது உள்ளங்கை நெல்லிக் கனி.

இருந்தவர் இறந்தால் இருப்பவர் இரங்குவது தெரிந்த தைச் சொல்வதும் தரணி மரபதுவே! மருந்தாய்ப் பிணி தீர்க்க மகான்கள் மறைந்துவிட்டால் பெருந்துயரம்; இருந்தா லும் பெரிதான வெற்றிடத்தை விருந்தால் நிரப்பிவிட முடி யாததால் திருந்துநம் உள்ளத்தால் திடமுடன் அன்புப்பணி இருந்திறக்கும் வரைசெய்தல் இன்றிமை யாததுகாண்! நலிந் தார்க்கு நல்வார்த்தை நாவறண்டார்க்குச் செம்புநீர் பசித் தார்க்கு பிடி அன்னம் பாடுபட்டார்க் குடன்கூலி விழுந்தார்க் குக் கைத்தாங்கல் விறகினுட் தீ போல உளுந்துருளும் நேரத் துள் உன்பணியை இறைபணியாய் உளச் செம்மை வலுவோடு முருகேசு சுவாமி செய்த துளம் கொண்டு நிதம் செய்வாம்.

சந்நிதியான் க. ப. பேரவை வளர்க !
வாழ்க சிரடியர் எல்லாம் !
சைவம் ளர்க !
சுவாமிகளின் தொண்டு சிறக்க !
சிவனடியார் தொண்டு சிறக்க !
வாழ்க முருகேசம்.

சுவாமிகளின் கடைக் காளைப் பழயை காய்
**வ. அ. தங்கமயில்**



''உள்ளம் கருவறை ஊனுடம் பாலயம்'' என்றுமன்புக்
கள்ள மிலாது கருத்தூன்றிக் கந்தன் கழலடியைத்
தெள்ளத் தெளிந்து தெருளுறச் சேவித் துயரவென்றும்
வள்ளற் பிரானாய் வயப்படு வாகி வழிமொழியே.

5

மொழியே மவுனம் மகிழ்வாய் மலர
மொழிந்த முருகேச சாமி — பொழிந்த
அமுதத்து அன்பின் அரவணைப்பில் யாரும்
குமுதாய் மலர்ந்தள ரே!

மலர்ந்த மவுனம் மகிழ்வே கவனம் முருகினிலாய்த்
கலந்து தினமும் தொடர்ந்து தியானக் குறைவிலதாய்ப்
பொலிந்த அருளின் பொதிகைப் யொறுமைப் பொறிவழியே
புலர்ந்த படியே முனைவு மனத்திற் பழகுவமே,

6

பழகு மொழியிற் பரம குருதன்
அழகு பொழியுமவ் வன்பு — குழையும்
முருகி னுறையும் குறியினுட் பக்தி
பெருக வருமவர் பேச்சு.

பேச்சுச் சுகமும் பெருகும் நலமும் மூருகினுள
மூச்சுச் சுகமும் முறுகிடு குண்டலினிச் சூசனமும்
தாக்கி மயக்கு அசுரத் தலைவர் தகவொழித்து
பூச்சியத் துட்பூ ரணசங் கரன்கு ருவரமாமே!

7

பரமுறும் பத்திப் பரவசத்தில் பாடுண்
டராசக நாளின் அமைதி — முரசுறு
நீட்ட மகலமில் நீதிமொழி காட்டும்
வீட்டிற் சூரிய விதம்.

விதவித மாக வடிவேள் விளக்கம் விளக்குமொளி
இதபதம மாக இணைகால் பிடிக்கும் இதயமொழி
அதுவிதெ னாது அறுமுக தத்துவ அன்புமொழி
இதுவரை தந்த இணையில வேலன் இருதயமே!

## 8

இருதயம் தாங்கி இயங்கிய யாக்கை
உருமறைத் தெம்முட் கலந்தாய் — குருபரனாய்
குன்றின் ஒளியாய் குளத்துள் அமிர்தமதின்
இதின்பாய் இருந்த திரு.

திருவும் கலையும் திசைபுகள் கல்வியும் தீந்தமிழால்
தருமுன் நிலையும் தகவில புல்லரெம் தங்குதடை
குருவுன் பிரிவாற் குளம்பா துரைக்க எவருளரோ
முருகின் அருளால் முனைப்பு மழுங்கா முதல்தருமே!

## 9

தருமே தவமே தவத்தின் தியானக்
கருவின் திருவாய்க் கனிந்த — குருவே
சரவணன் செவ்வேள் சிரசிற் சிந்தை
சிரவணமாச் சீரின் சிரம்.

சிரம்பிர தானம் சிறுவெறும் பிற்கும் சரவணத்து
தரம்பிர தானம் தரணியிற் தோற்றம் அனவரதம்
பரம்பிர மாணம் பகுத்தறி வுண்டு பரமகுரு
வரம்பிர தான வரம்பில் இருந்த வலமுறையே!

## 10

வலமுறை வந்த வடிவேற் பழம்நின்
தலமுறை சந்நிதிக் கோவில் — வலமுற
வந்தார் தனவினை தீர்ந்தார் எனஉரை
தந்தார் முருகேசம் தானே!

தானே உருகி தமதடி யாரைத் தவமுறையில்
மானே உகந்த குறமகள் தேவ, மனையிருவர்
கோனே உணர உதாரண மூட்டி கருவழித்
தேனாய் உரைத்த தவமே முருக சுவாமிகண்டே.

முருகா யிருந்து முருகே பகர்ந்து
முருகே யிணைந்த முருகு!

முருகேச திருவிரட்டை மணிமாலை முற்றும்.

சுபம்.